**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS. 53/2024**

நாள்.04.03.2026

**வா.சா.2. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் வரம்பியம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். டேஸ்டி சுப்பிரமணியன் என்பவர் எங்கள் ஊராட்சியில் ஏற்கனவே ஊராட்சிமன்ற தலைவராக 10 வருட காலம் இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த கட்சியில் பொறுப்பில் உள்ளேன் என்றால் எந்த கட்சியும் இல்லை. திராவிட முன்னேற்றக்கழகத்தின் நடக்கின்ற கூட்டங்களில் கலந்து கொள்வேனா என்றால் நான் போகவில்லை. நான் நில அளவை பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றேன். தற்போது எனக்கு 68 வயதாகிறதா என்றால் எனக்கு 79 வயது ஆகிறது. எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் சர்வீஸ் ரிஜிஸ்டர் பார்த்து தான் சொல்ல முடியும். நான் ஓய்வு பெற்ற பிறகு வீட்டில் தான் இருந்து வருகிறேன். மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வரும் மணிகண்டன் என்பவருடைய உரிமையியல் வழக்கில் நான் சாட்சியாக உள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் மற்றொரு சாட்சியாக இருக்கும் முருகையன் என்பவர் எங்களது ஊராட்சியில் மோட்டார் பம்புகளை இயக்கும் OH ஆப்பரேட்டராக இருந்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. ஊராட்சி செயலாளரை தான் கேட்க வேண்டும். OH

ஆப்பரேட்டர் என்ற பணியினை ஊராட்சி மன்ற தலைவர் பரிந்துரை செய்து வட்டார வளர்ச்சி அலுவலர் பணி நியமனம் வழங்க வேண்டும். அந்த சமயத்தில் யார் ஊராட்சிமன்ற தலைவராக இருந்தார்களோ அவர்கள் பரிந்துரை செய்திருப்பார். ராஜேந்திரன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் பார்சல் எடுக்கும் போது தெரியும். எனக்கு என்ன வகையான பார்சல் வந்தது, எத்தனை முறை வந்தது என்றால் எனது மகனுக்கு சர்வீஸ் கமிஷனில் இருந்து பார்சல் வரும், 3 முறை எடுத்துள்ளேன். எனக்கு டி நகரில் உள்ள புக்ஸ் சென்டரில் இருந்து பார்சல் வரும். நான் பார்சல் வாங்கிய பில்லை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த பில்லிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. பார்சல் சர்வீஸ் இருப்பதாக சொல்லப்படும் இடம் காமராஜர் தெருவில் உள்ளது. காமராஜர் தெரு திருத்துறைப்பூண்டியில் தான் உள்ளது. காமராஜர் தெரு இந்த நீதிமன்றத்திலிருந்து எந்த திசையில் உள்ளது என்றால் அது தெரியாது. பார்சல் சர்வீஸின் வாசல் எந்த பக்கம் உள்ளது என்றால் தெரியாது. பார்சல் சர்வீஸ் அருகில் என்ன பெரிய கடை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பார்சல் சர்வீஸ் அலுவலகம் மெயின் ரோட்டில் உள்ளதா அல்லது தெருவில் இருந்ததா என்றால் நான் சென்றபோது மெயின் ரோட்டில் இருந்தது. நான் பார்சல் சர்வீஸிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால்

காலை 11.00 மணிக்கு சென்றேன். நான் பார்சல் அலுவகத்தில் பார்சல் வாங்கும் போது அங்கு யார்யார் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் 3 முறை பார்சல் அலுவலகத்திற்கு சென்றபோது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு பார்சலை கொடுத்த நபரின் பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது. அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த பணியாளர் கொடுத்தார். நான் 3 முறை பார்சல் அலுவலகத்திற்கு சென்றபோது கிளார்க் மட்டும் தான் இருந்தார் என்றால் சரிதான். பார்சல் சர்வீஸை யார் நடத்தி வருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது கையெழுத்தை தமிழில் போடுவேனா அல்லது ஆங்கிலத்தில் போடுவேனா என்றால் தமிழில் தான் போடுவேன். நான் கையெழுத்து போடும் பொழுது இன்சியலை போட்டு விட்டு கையெழுத்து போடுவேனா அல்லது கையெழுத்து போட்டுவிட்டு இன்சியலை போடுவேனா என்றால் இன்சிலை போட்டுவிட்டு தான் கையெழுத்து போடுவேன். நான் எந்த ஆவணத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் பிராமிசரி நோட்டில். அந்த பிராமிசரி நோட்டை யார் கொடுத்தார்கள் என்றால் ராஜேந்திரனும், கலியபெருமாளும் என்னிடம் கொடுத்தார்கள். நான் கையெழுத்து போட்ட பொழுது பிராமிசரி நோட்டில் தொகை எழுதப்பட்டிருந்ததா என்றால் ரூ.1 லட்சம் எழுதப்பட்டிருந்தது. அதில்

தான் நான் கையெழுத்து போட்டேன். பிராமிசரி நோட்டில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதா அல்லது இரண்டாவது போடப்பட்ட கையெழுத்து என்னுடையதா என்றால் முதலாவதாக போடப்பட்ட கையெழுத்து என்னுடையது. என்னுடன் வேறு யாரேனும் கையெழுத்து போட்டார்களா என்றால் வரம்பியத்தைச் சேர்ந்த முருகையன் என்பவரும் கையெழுத்து போட்டார். எங்களை தவிர வேறு யாரேனும் கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு நேராக வேறு யாரும் கையொப்பம் போடவில்லை. என்னிடம் கையெழுத்து வாங்கும் பொழுது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 11.30 மணி இருக்கும். கலியமூர்த்தி என்பவர் அங்கு இருந்தாரா என்றால் அவர் எந்த கலியமூர்த்தி, எந்த ஊராட்சியை சேர்ந்தவர் என சொல்லிவிட்டு சாட்சி மீண்டும் எழிலூாரை சேர்ந்த செல்வராஜ் மகன் கலியமூர்த்தி என்பவர் ராஜேந்திரன் என்பவரிடம் பணம் வாங்கி இருந்ததால் நான் கையெழுத்து போட்டேன். கலியமூர்த்திக்கு என்ன வயது இருக்கும் என்றால் தெரியாது. கலியமூர்த்தி என்பவர் என்ன கலரில் இருப்பார் என்றால் மாநிறத்தில் இருந்தார். கலியமூர்த்தியை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். நான் ஏற்கனவே பார்த்தபோது ஒல்லியாக இருந்தார். தற்போது குண்டாக இருக்கிறார். வாதி தரப்பு வழக்கறிஞர்

கலியமூர்த்தி என்பவர் நீதிமன்றத்திற்கு உள்ளே வராமல் வெளியில் இருந்து சாட்சி அடையாளம் காட்டி கூறுகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.